

திருமதி வாணி







மாட்டுக்கொட்டாயின் வாசலில் ஏதோ விழுந்து கிடந்தது.
திருமதி வாணி என்னவென்று எட்டிப் பார்த்தது.
"அட, முதலாளியின் மகன் நேற்று
படித்துக்கொண்டிருந்த புத்தகம். இங்கே எப்படி? கீழே
போட்டுவிட்டு போய்விட்டான் போல.. "



திருமதி வாணிக்கு புத்தகத்தைப் படிக்கத் தெரியாவிட்டாலும் அதிலிருந்த படங்களைப் பார்த்து ரசித்தது. ஒரு தொட்டியில் மூன்று ஆண்களின் படம்! ஷூவில் வாழ்ந்த ஒரு வயதான பெண்ணின் படம். மேலும் நிலவைத் தாண்டிக் குதிக்கும் பசுவின் படம்! "என்ன வேடிக்கை!" என்று கூவிய திருமதி வாணி உடனடியாக கொஞ்சம் தாவிப் பார்த்தது.







பொத்தென்று கீழே
விழுந்தது திருமதி வாணி.
மாட்டுப்பட்டியே கொஞ்சம்
அதிர்ந்தது.

"ஏய்! என் முட்டைகளை ஏன் குதிக்க
வைக்கிறாய்! என்ன செய்கிறாய்?" என்று கோழி
கூச்சலிட்டது.
"நான் நிலவைத் தாண்டிக் குதிக்கப் பயிற்சி
செய்கிறேன்," என்றது திருமதி வாணி.





"நிலவைத் தாண்டிக் குதிக்கப் போகிறாயா?" என்ற கோழி கொக்கொக் கென்று சிரித்தது. அப்படி வயிறு வலிக்கச் சிரித்ததில் அதன் இரண்டு முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவந்துவிட்டன.




கூரையில் அமர்ந்திருந்த புறா திருமதி வாணியைப் பார்த்து சிரித்தது. வைக்கோலில் இருந்த எலியும் திருமதி வாணியைப் பார்த்து சிரித்தது.

"என்ன நடந்தது?" என்று கேட்டது அன்னப்பறவை.

புறாவிற்கும் எலிக்கும் சிரிப்பை அடக்கமுடியவில்லை.

சிரிப்பின் நடுவே திணறி திணறி இந்த செய்தியை அன்னப்பறவையிடம் கூறின.






அன்னப்பறவை
இதைக் கேட்டு
சிரித்ததில் அதன்
வால் இறக்கைகள்
மூன்று உதிர்ந்து
விட்டன!



அன்னப்பறவை இந்த செய்தியை
வாத்திடம் சொன்னது.






குவாக் குவாக் என்று சிரித்த வாத்து
குதிரையிடம் சொன்னது.
சிரித்து சிரித்து குதிரைக்கு விக்கல்
வந்துவிட்டது.
"என்ன ஆச்சு?" என்று கேட்டது பன்றி.






திருமதி வாணி நிலாவைத் தாண்டப் போகிறாராம் என்றது குதிரை. இதைக் கேட்ட பன்றி சேற்றுக்குட்டைக்குள் விழுந்து புரண்டு சிரித்தது.



பன்றி மூச்சுவிட தலையைத் தூக்கியபோது ஆட்டிடம் இதைச் சொன்னது.



ஆடு சிரித்தது. பன்றி சிரித்தது.
குதிரை சிரித்தது. வாத்து சிரித்தது.
அன்னப்பறவை சிரித்தது.
எலியும் புறாவும் சிரித்தன.
கோழியும் அதன் குஞ்சுகளும் சிரித்தன.



தூங்கப்போகும் வரை சிரித்துக்கொண்டே இருந்தன.



எல்லா விலங்குகளும் தூங்கின - திருமதி வாணியைத் தவிர.
அது கொட்டகையின் வெளியே மேலும் கீழும் குதித்து பயிற்சி செய்தது.
"இதை செய்ய மன உறுதியும் சிறிது பயிற்சியும் தேவை, அவ்வளவு தான்!" என்ற எண்ணத்துடன் திருமதி வாணி இரவு முழுவதும் குதித்துக் கொண்டே இருந்தது.
நிலவு மேலே பிரகாசித்துக் கொண்டிருந்தது.





கிழக்கே தோன்றிய மெல்லிய ஒளிக் கீற்று விடியப் போவதை காட்டுகின்றவரை திருமதி வாணி குதித்துக் கொண்டே இருந்தது. நிலவு தன் பயணத்தை முடித்துக் கொண்டு மேற்கில் மறையத் தொடங்கியிருந்தது.



சேவல் கொக்கரிக்க எல்லா விலங்குகளும் எழுந்தன.




இப்போது நிலவு அடிவானத்தில் இருந்தது -
தரையில் அமர்ந்திருப்பது போல.
இன்னும் சில நிமிடங்களில்
மறைந்துவிடும்.
திருமதி வாணிக்கு இன்னும் ஒரே ஒரு
தடவை தாண்டுவதற்கு மட்டுமே நேரம்
இருந்தது.





இதுவரை தாண்டியதிலேயே மிக உயரமான தாண்டுதல் இது.
நிலவு தரையில் உட்கார்ந்திருப்பதை விலங்குகள் பார்த்தன. திருமதி வாணி உயரே தாவுவதைப் பார்த்தன. திருமதி வாணி நிலவைத் தாண்டிக் குதிப்பதைப் பார்த்தன!!



"தாண்டிவிட்டது!" என்று கூவிய கோழி, பரபரப்பில்
இன்னொரு முட்டையையும் பொரித்துவிட்டது.



அன்னப்பறவையும் பரபரப்பில் இன்னொரு
வால் இறக்கையை இழந்தது.
குதிரைக்கு திரும்பவும் விக்கல் வந்துவிட்டது.
சேற்றில் குதித்தது பன்றி!







"சாதித்து விட்டாய் திருமதி வாணி! நிலவைத் தாண்டிக் குதித்து விட்டாய்!” என்று பாராட்டின. "மன உறுதி, சிறிது பயிற்சி அவ்வளவு தான்" என்று அடக்கமாக சொன்னது திருமதி வாணி!



"நான் அடுத்த முறை சூரியனைத் தாண்டிக் குதிப்பேன் என்று நினைக்கிறேன், இதற்கு முன் எந்த பசுவும் இதைச் செய்ததில்லை."" என்றது திருமதி வாணி.

"என்னது? சூரியனைத் தாண்டப் போகிறாயா?" என்ற பன்றி மீண்டும் ஆசையாக சேற்றில் குதித்தது. ஆனால் இந்த முறை திருமதி வாணியைப் பார்த்து யாரும் சிரிக்கவில்லை.





"யாருக்குத் தெரியும்? சூரியனைத் தாண்டிய பிறகு, மேலே குதிக்க அனைத்து நட்சத்திரங்களும் கிரகங்களும் இன்னும் எஞ்சியுள்ளன! " என்றது திருமதி வாணி.

"உண்மையாகவே உன்னால் செய்ய முடியுமா?" குதிரை கேட்டது.



"ஏன் முடியாது?” என்று கேட்ட திருமதி வாணி அசதியினால் படுத்துக்கொண்டது. "மன உறுதி . . . “ என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, கண்கள் சொக்க, தூங்கிவிட்டது.

"சிறிது பயிற்சி அவ்வளவு தான்" என்று முடித்தது கோழி. எதையுமே அரைகுறையாய் நிறுத்தப் பிடிக்காது அதற்கு!

முற்றும்

